1

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये

Rs. 100

रु. 100

ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

DR 164511

RS. 100/- SHEMPARK PUBLIC SCHOOL

18/06/2024 MORASAPPATTI

G.செல்வம்
மு.தா.வி.இடைப்பாடி
உ.எண்:17/2000

-1-

## குத்தகை பத்திரம்

2024–ம் வருடம் ஜீன் மாதம் 19 (19.06.2024) ந்தேதிக்கு தமிழ் நிகழும் ஸ்ரீகுரோதி வருடம் ஆனி மாதம் 05–ம் தேதியில் அமலா எஜீகேஷனல் ட்ரஸ்ட் என்ற கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக அறங்காவலரும் நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், தொ.பச்சுடையாம்பாளையம் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.பெரியாக்கவுண்டர் அவர்களின் குமாரருமான A.K.P. மணி –1 மேற்படி அமலா எஜீகேஷனல் ட்ரஸ்ட் என்ற கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர்களான சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் அஞ்சல் C.P.M. காம்ப்ளக்ஸ் என்ற முகவரியில் வசிக்கும் M.S. முத்துக்கவுண்டர் அவர்கள் குமாரருமான M. அண்ணாதுரை –2 திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், செங்காட்டுப்பட்டி அஞ்சல் 1/3 மூலக்காட்டில் வசிக்கும் A.இளையப்பன் அவர்களின் குமாரருமான E. கார்த்திக் –3, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரி வெள்ளி கிராமம், மொரசப்பட்டி முகவரியில் இயங்கும் ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் (Shempark Public School) என்ற பள்ளியின் தாளாளரும்,

ATTESTED
V. A. 19/6/2024

V. ANANDAN, M.A.,B.L
ADVOCATE & NOTARY
Enroll No: 71/87, Notary GO.MS: 220/2021
National Complex, Jkpm. Road,
EDAPPADI (PO & Tk),
Salem (Dt)-637 101 Cell: 9842742777

GOVERNMENT OF TAMILNADU ★ NOTARY ★
V. ANANDAN, M.A.,B.L
EDAPPADI-637 101
SALEM (Dt)
GO.MS: 220/2021

19/6/2024

1
2
3
4

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், தொ.பச்சுடையாம்பாளையம் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.பெரியாக்கவுண்டர் அவர்களின் குமாரருமான A.K.P. மணி – 4 ஆகிய நாம் அனைவரும் (நம்மில் 1 முதல் 3 வரை நபர்கள் அமலா எஜீகேஷனல் ட்ரஸ்ட் என்ற கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர்களாக இருந்து குத்தகைக்கு விடுபவர்களாகவும் நம்மில் 4–வது நபர் ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் (Shempark Public School) என்ற பள்ளியின் தாளாளரும் குத்தகைக்கு எடுப்பவராகவும்) நம்முடைய முழுமனசம்மதியில் சம்மதித்து எழுதிக் கொண்ட குத்தகை பத்திரம் என்னவென்றால்

மேற்படி அமலா எஜீகேஷனல் ட்ரஸ்ட் (பதிவு எண். 762/1995) என்ற கல்வி அறக்கட்டளையின் பெயருக்கு சென்ற 28.10.2002–ந் தேதியில் ஒரு கிராயம் பெற்று மேற்படி பத்திரம் எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1 புத்தகம் 2002ம் ஆண்டின் 1592 மற்றும் 1593 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப்பத்திரப்படி அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டு மேற்படி அறக்கட்டளையின் அறங்காவலர்களால் மற்றும் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரான நம்மில் 1 நபருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டும், நம்மில் 2, 3 நபர்கள் அறங்காவலர்கள் என்ற முறையிலும் பாத்தியப்பட்டு நம்மில் 1 முதல் 3 வரை நபர்கள் அறங்காவலர்களாக நிர்வகித்து வரும் சொத்துக்களில் இதன் அடியில் கண்ட சொத்துக்களை நம்மில் 4–வது நபர் நடத்தி வரும் ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் (Shempark Public School)என்ற பள்ளிக்காக குத்தகைக்கு கேட்டதற்கு நம்மில் 1 முதல் 3 வரை நபர்களும் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு இதன் அடியில் கண்ட சாட்சிகள் முன்பாக குத்தகை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். மேற்படி குத்தகை பத்திரத்தில் கண்ட ஷரத்துப்படி கீழ்க்கண்ட நிபந்தனைகளை நாம் அனைவரும் நம்முடைய மனப்பூர்வமான முழுமனச் சம்மதியுடன் சம்மதிக்கின்றோம்.

**நிபந்தனைகள்:**

1. நம்மில் 1 முதல் 3 வரை நபர்கள், நம்மில் 4–வது நபரிடம் இருந்து அட்வான்ஸ் தொகை ஏதும் பெற்றுக் கொள்ளாமல் நாளது தேதியில் இருந்து எதிர்வரும் 30 வருட கால வாய்தா வரை நம்மில் 4–வது நபர் இதன் அடியில் கண்ட சொத்துக்களில் தம்முடைய ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் (Shempark Public School) என்ற பள்ளியை நடத்துதற்காக வருடம் ஒன்றுக்கு ரூ.3,330/– (மூன்றாயிரத்து முன்னூற்று முப்பது) வீதம் குத்தகையாக நம்மில் 1 முதல் 3 வரை நபர்களிடம் மேற்படி அறக்கட்டளையின் வளர்ச்சி நிதிக்காக செலுத்தி வர வேண்டியது.

ATTESTED
19/6/2024
V. ANANDAN, M.A.,B.L
ADVOCATE & NOTARY
Enroll No: 71/87, Notary GO.MS: 220/2021
National Complex, Jkpm. Road,
EDAPPADI (PO & Tk),
Salem (Dt)-637 101 Cell: 9842742777

NOTARY
GOVERNMENT OF TAMIL NADU
V.ANANDAN, M.A.,B.L.,
IDAPPADI-637 101.
SALEM (Dt).
GO.MS: 220/2021
19/6/2024

1 [signature]
2 [signature]
3 [signature]
4 [signature]

2. நம்மில் 4–வது நபர் தமது ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் என்ற பள்ளிக்காக தேவைப்படும் கட்டிடங்கள் வகுப்பறைகள் மற்றும் பள்ளிக்குரிய இதர தளவாட சாமான்களையும் நிர்மாணம் செய்து கொள்ள நம்மில் 1 முதல் 3 வரை நபர்கள் சம்மதிக்கின்றார்கள்.
3. மேற்படி குத்தகை தொகை ரூ.3,330/– மட்டுமே பெற்றுக் கொள்வதென்றும் குத்தகை கால இறுதி வரை மேற்படி தொகையை தவிர அதிகப்படியான தொகை கோருவதில்லை எனவும் நம்மில் 1 முதல் 3 வரை உறுதியளிக்கின்றார்கள்.
4. மேற்படி குத்தகை தொகையை அந்தந்த வருட முடிவில் நம்மில், 4–வது நபர் 1 முதல் 3 வரை நபர்களிடம் ரொக்கமாக செலுத்திவிட இதன்மூலம் சம்மதிக்கின்றார்.
5. மேற்படி சொத்தில் நம்மில் 4–வது நபர் கட்டிடங்கள் கட்டுவது குறித்தோ உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொள்வது குறித்தோ நம்மில் 1 முதல் 3 வரை நபர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது என இதன்மூலம் உறுதியளிக்கின்றனர்,
6. மேற்படி ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் (Shempark Public School) இதன்அடியில் கண்ட சொத்தில் நடத்திவருவதற்கு நம்மில் 1 முதல் 3 வரை நபர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.
7. குத்தகை வாய்தா காலமாகிய இனி வரும் காலம் 30 வருடத்திற்கு சொத்தில் இருந்து பள்ளி நிர்வாகம் நடந்து வருவதை எந்த காரணம் கொண்டும் நம்மில் 1 முதல் 3 வரை நபர்கள் நிர்ப்பந்தம் செய்வதில்லை எனவும் இதன்மூலம் உறுதியளிக்கின்றார்கள்.
8. மேற்படி சொத்தில் பள்ளிக்கு தேவையான மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவற்றை பள்ளிக்காக நம்மில் 4–வது நபர் அவரது பெயரில் பெற்றுக் கொள்வதற்கு நம்மில் 1 முதல் 3 வரை நபருக்கு எந்தவிதமான ஆட்சேபனை கிடையாது என உறுதியளிக்கின்றனர்.
9. நம் அனைவரின் ஒப்புதலோடு இந்த குத்தகை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். அதன்படி இந்த நிபந்தனைகள் அனைத்திற்கும் உட்பட்டு இந்த குத்தகை பத்திரம் பதிவு செய்யப்படுகிறது.
10. நாளது தேதியில் இருந்து குத்தகை காலமாகிய 30 வருடங்களுக்கு நம்மில் 1 முதல் 3 வரை நபர்கள் நம்மில் 4–வது நபரின் பள்ளி நிர்வாகத்திற்கு இதனடியில் கண்ட சொத்திலும் மற்றும் அறக்கட்டளையின் இதர நிலத்தில் வழியாக மேற்படி ஷெம்பார்க் பப்ளிக் ஸ்கூல் (Shempark Public School)பள்ளிக்காக விடப்பட்டுள்ள 45 அடி பாதையிலோ எந்தவிதமான இடையூறும் செய்வதில்லை என இதன்மூலம் உறுதியளிக்கின்றனர்.

NOTARY
V. ANANDAN, M.A.B.L.
IDAPPADI-637 101.
SALEM (Dt).
GO: MS: 220/2021
GOVERNMENT OF TAMILNADU

19/6/2024

ATTESTED
19/6/2024

V. ANANDAN, M.A., B.L
ADVOCATE & NOTARY
Enroll No: 71/87, Notary GO.MS: 220/2021
National Complex, Jkpm. Road,
EDAPPADI (PO & Tk),
Salem (Dt)-637 101 Cell: 9842742777

1)
2
3
4

இந்த குத்தகை பத்திரத்தின் ஷரத்துக்களை நம்மில் எவரும் மீறுவதில்லை எனவும், நம்மில் மீறியவர் மீறாத நபருக்கும் அவரது நிர்வாகத்திற்கும் ஏற்படும் சகல விதமான கஷ்ட நஷ்டங்களுக்கும், சிவில் கிரிமினல் போன்ற கோர்ட் நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட இதன்மூலம் சம்மதிக்கின்றோம்.

இதன்படிக்கு நாம் அனைவரும் குத்தகை பத்திரத்தின் ஷரத்துக்ளை படித்துப் பார்த்து ஒப்புக்கொண்டு நம்முடைய மனப்பூர்வமான முழுமனச் சம்மதியுடன் எழுதிக் கொண்ட குத்தகை பத்திரம் சரி.

## சொத்து விவரம்

சேலம் மேற்கு ரிடி எடப்பாடி சப்ரிடி எடப்பாடி வட்டம், கிராம எண் 8, வெள்ளரி வெள்ளி கிராமத்தில்,

புல எண். 129/2ஐ புஞ்.ஹெக். 0.92.0க்கு ஏக்.2.27 தீர் ரூ.5.12 இது பூராவும் இதற்கு நான்கெல்லை அமலா எஜீகேஷனல் ட்ரஸ்ட் இதர நிலங்களுக்கும் (தெற்கு), (மேற்கு), (கிழக்கு) அமலா எஜீகேஷனல் ட்ரஸ்ட் இதர நிலங்களுக்கும், இந்த குத்தகை பத்திர எழுதிகொடுக்கும் நிலத்திற்கு செல்வதற்காக விடப்பட்ட கிழமேல் 45 அடி அகல பாதைக்கும் (வடக்கு), இதன் மத்தியில் உள்ள ஏக்.2.27 நிலம் பூராவும்

புல எண். 129/2எச் புஞ்.ஹெக்.0.84.0க்கு ஏக்.2.07சென்ட் தீர் ரூ.4.67 இது பூராவும் இதற்கு நான்கெல்லை 129/2ஐ நெம்பர் கிரைய நிலத்துக்கும் (மேற்கு) புல 129/5 நெம்பரில் நல்லாகவுண்டர் நிலத்துக்கும் (வடக்கு) புல எண். 129/2ஜி நெம்பரில் அமலா கல்வி அறக்கட்டளை நிலத்துக்கும் (கிழக்கு) பழனிசாமி நிலத்துக்கும் (தெற்கு) இதன் மத்தியில் உள்ள ஏக். 2.07 சென்ட் நிலம் பூராவும்.

இதற்கு சம்மந்தப்பட்ட சகல பாத்தியங்கள் சகிதமும் மேற்படி நிலத்திற்கு எடப்பாடி வழி பூலாம்பட்டி செல்லும் ரோட்டின் வடபுறம் கிழமேல் 45 அடி அகல பாதையின் வழியாக வண்டி வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் மற்றும் ஆட்கள் போக வர இருக்கும் தட வழி பாத்தியம் சகிதம் சகல விதமான ஈஸ்ட்மெண்ட் பாத்தியங்கள் சகிதமும் சேர்த்துதான் இந்த குத்தகை பத்திரத்திற்கு சம்பந்தப்பட்டது.

மேற்படி குத்தகை தொகையின் மதிப்பு வருடம் ரூ. 3,330/– வீதம் 30 வருடங்களுக்கு ரூ. 99,900/–.

NOTARY
V. ANANDAN, M.A., B.L.
EDAPPADI-637 101.
SALEM (Dt).
GO MS: 220/2024
NOTARIAL GOVERNMENT OF TAMIL NADU NOTARIAL
19/6/2024

ATTESTED
V. A... 19/6/2024
V. ANANDAN, M.A., B.L.
ADVOCATE & NOTARY
Enroll No: 71/87, Notary GO.MS: 220/2024
National Complex, Jkpm. Road,
EDAPPADI (PO & Tk),
Salem (Dt)-637 101 Cell: 9842742777

1
2
3
4